கோரிக்கை எண் 54.

திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண். 54—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 8,48,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(1) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பேரவையின் அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவுப்படி பேரவையின் அலுவல்கள் பற்றிய விவரம் வருமாறு:

11–7–1980 முதல் 15–7–1980 வரை.		ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி அலுவல்கள் நடைபெறும்.
16–7–1980 (புதன் கிழமை).	20	வேளாண்மை.
	48	வேளாண்மை குறித்த மூலதனச்செலவு.
17–7–1980 (வியாழக் கிழமை).	26	கைத்தறியும் நெசவுத் தொழிலும்.
	27	கதர்.

அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளல்.

18—7—1980 (வெள்ளிக் கிழமை).	18	மருத்துவம்.
	19	பொதுச் சுகாதாரம்.
19—7—1980 (சனிக் கிழமை).	24	தொழில்கள்.
	49	தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.
	6	பத்திரப் பதிவு.
	10	பால் வழங்கு திட்டங்கள்.
20—7—1980 (ஞாயிற்றுக் கிழமை)		விடுமுறை.
21—7—1980 (திங்கட் கிழமை).	28	சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.
	34	நகர்ப்பகுதி வளர்ச்சி.
	39	சாலைகளும் பாலங்களும்.
	52	சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.
22—7—1980 (செவ்வாய்க் கிழமை).	9	மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.
	11	மாவட்ட நிர்வாகம்.
	15	காவல்துறை.
	16	தீயணைப்புப் பணிகள்.
	37	பொதுப் பணிகள்—கட்டிடங்கள்.
	38	பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1980 ஜூலை 10]

22–7–1980 (செவ்வாய்க் கிழமை)—தொடர்ச்சி	51	பொதுப் பணிகள்—கட்டிடங்கள்—குறித்த மூலதனச் செலவு.
23–7–1980 (புதன் கிழமை).	3	மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்.
	40	சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து.
	53	சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.
24–7–1980 (வியாழக் கிழமை).	36	பாசனம்.
	50	பாசனம் குறித்த மூலதனச் செலவு.
25–7–1980 (வெள்ளிக் கிழமை).	31	பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.
	44	எழுதுபொருள், அச்சுத் துறை.
26–7–1980 (சனிக் கிழமை).	22	கால்நடை வளர்ப்பு.
	30	சமூக நலன்.
27–7–1980 (ஞாயிற்றுக் கிழமை).		விடுமுறை.
28–7–1980 (திங்கட் கிழமை).	21	மீனளம்.
	35	நுகர்ப் பொருள் வழங்கல்.
		காலை 11 மணி வரை.
29–7–1980 (செவ்வாய்க் கிழமை).	32	பின் தங்கிய வகுப்பினர் நலன்.
		காலை 11 மணி முதல் மாலை 1 மணி வரை.
	7	மாநிலச் சட்டமன்றம்.
	8	தேர்தல்கள்.

மற்ற மானியக் கோரிக்கைகளைப் பொறுத்தவரை விவாதமின்றி 29—7—1980 அன்று 1 மணிக்கு வாக்கெடுக்கப்படும்.

29—7—1980 அன்று வாக்கெடுப்பிற்குப் பின் நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல்.

30—7—1980 (புதன் கிழமை).	நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு ஆய்வு செய்தல், நிறைவேற்றுதல்.

17—7—1980 அன்று தேவைப்படின் பேரவை மாலையிலும் கூடும்

வெட்டுத் தீர்மானத்திற்கான அறிவிப்புகள்

16, 17, 18, 19—7—1980 ஆகிய நாட்களில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் மானியக் கோரிக்கைகள் பற்றிய வெட்டுத் தீர்மானங்களுக்கான அறிவிப்புகள் 12—7—1980 அன்று மாலை 3 மணிக்குள் கொடுக்கப்பட வேண்டும். மற்றைய மானியக் கோரிக்கைகளுக்கான வெட்டுத் தீர்மான அறிவிப்புகள் 15—7—1980 அன்று மாலை 3 மணிக்குள் கொடுக்கப்படவேண்டும்.

திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவரவர்களே, இப்படி முக்கியமான மானியக் கோரிக்கைகள் எல்லாம் சேர்த்து ஒரு நாளில் வைக்கப்பட்டிருக்கின்றதே, இது சரிதானா ? காவல் துறையைக் கொண்டுபோய்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக்குழுவிலே பேராசிரியர் அவர்களும் இருந்தார்கள். கட்சித் தலைவர்களும் இருந்தார்கள். ஆகவே, எல்லோரும் சேர்ந்துதான் இந்த முடிவு எடுத்திருக்கிறார்கள். மேலும், இப்போதுதான் அமைச்சரவை ஏற்பட்டிருக்கின்றது. ஒரு மாதம் கூட ஆகவில்லை. ஆகவே, அவ்வளவு பெரிய பிரச்சினைகள் ஒன்றும் இல்லை. பிரச்சினைகள் எல்லாம் 4, 5 மாதங்களுக்குப் பிறகுதான் வரும் என்று எல்லோரும் சேர்ந்துதான் இப்படி முடிவெடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மேலும் 17-ஆம் தேதி மட்டும் தேவைப்பட்டால் பேரவை மாலையிலும் கூடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 11-ஆம் நாள், வெள்ளிக் கிழமை காலை 9—00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–20 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(4) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

42. நீலகிரி மாவட்டம் குன்னூரில் பாலகிளவா குன்றுகளில் உள்ள ஆதரவற்றோர் இல்லத்தைச் சேர்ந்த சகோதரிகளுக்குச் சொந்தமான TNN 421 ஆம் எண் வண்டியைப் பொறுத்த வரையில் செலுத்தத்தக்க வரியிலிருந்து சலுகை அளிப்பது குறித்து உள்துறையின் (போக்குவரத்து-I) 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 23 ஆம் தேதியிடப்பெற்ற 513 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*15. 1980–81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 1, 4, 5, 41, 46 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள் (தமிழும் ஆங்கிலமும்).

*16. 1980–81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 4, 12 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள் (தமிழும், ஆங்கிலமும்).

*17. 1980–81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 2, 47 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள் (தமிழும், ஆங்கிலமும்).

**18. கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்துசமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழும், ஆங்கிலமும்).

19. கோரிக்கை எண் 45—தமிழ்நாடு அரசு வனத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (1980–81) (தமிழ், ஆங்கிலம்).

---

*9–7–1980 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றது.

**8–7–1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றது.